# மேலாண்மையியல் நோக்கில் சங்க இலக்கியம்

***ஜெ. சங்கீதா***
முனைவர் பட்ட ஆய்வாளர்
அரசு கலைக்கல்லூரி, அரியலூர்

மலர்: 4

இதழ்: 3

மாதம்: ஜனவரி

வருடம்: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

மேலாண்மை பன்முக ஆளுமைகளை மையமாகக் கொண்டதாகும். மனித இனம் செய்யும் செயல்களைத் தொகுத்து வகைப்படுத்தி நெறிப்படுத்தியும் அமைத்துக்கொண்டதாக பண்டைய மேலாண்மையைச் சுட்டலாம். நவீன மேலாண்மை என்பது அச்சு இயந்திரங்களின் கண்டுபிடிப்புக்கு ஏற்ப உருவானதாகும். மனித சமூகத்தோடு பின்னிப்பிணைந்த மேலாண்மையை ஆளுமையாக எடுத்தியம்பலாம். தனிமனிதன், குழு, பெருங்குழு, வணிகம் உள்ளிட்ட பன்முகச் செயல்களும் இதனுள் அடங்கும். அவ்வகையில் சங்க கால சமூகத்தில் மேலாண்மையை எவ்வாறு மேற்கொண்டிருந்தனர் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை எடுத்தியம்புகிறது.

### நீர் மேலாண்மை

நீர் மேலாண்மை என்பது முதன்மையான வாழ்வியலின் ஆதாரமாகும். நாட்டின் வளம் என்பது அதனுடைய நீர் மேலாண்மையைப் பொருத்தே அமைகிறது. இலாபத்தை பொறுத்தவரை ஒன்று வருமானத்தை அதிகரிக்க வேண்டும் அல்லது செலவைக் குறைக்க வேண்டும். நீரானது தொழிற்சாலைகளுக்கு மட்டுமல்லாமல் மனித இனத்திற்கே அடிப்படையானதாகும்.

வேளாண்மையை சார்ந்தே வாழ்ந்தனர். மன்னர்கள், மக்களுக்கு வாய்ப்புக் கொடுக்கும்வகையில் ஆறுகளைப் பயனுடையதாக ஆக்கவும் அவற்றை தேக்கி வைத்துப் பயன்படுத்தவும் பன்முகப் பயனளிப்பு தரக்கூடியதாகவும் மாற்றி நிர்வாகத்தை மேற்கொண்டனர். ஆற்றுப் போக்குடைய நாட்டை ஆளும் மன்னன் அவ்வாற்றை அகலப்படுத்தலும், ஆழமாக்கலும், ஆற்றின் கரைகளை உயர்த்தலும், ஆற்றிலிருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் நீரைக் கொண்டு செல்லத்தக்க கால்வாய்களை வெட்டுவித்தலும், தக்க இடங்களில் ஆற்றில் அணைக்கட்டி நீர் பல்வேறு வழிகளில் பிரித்துப் பாய்வதற்கு வழிவகை செய்தலும் இன்றியமையாதவையாகும். இத்துறைகளில் மன்னர்கள் மிகுந்த கவனம் செலுத்தி வந்தனர் என்பதை கடியலூர் உருத்திரங்கண்ணனார்,

"காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம் பெருக்கிக்
பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கிக்
கோயிலோடு குடிநிறீஇ
வாயிலொடு புழையமைத்து
ஞாயில் தொறும் புதைநீறிஇப்
பொருவோம் எனப் பெயர் கொடுத்து"
**(பட்டினப்பாலை 283 - 289)**

என்று எடுத்தியம்புவார். காடுகளைத் திருத்தி நாடாக்கி குளங்களை வெட்டி நாட்டின் வளங்களைப் பெருக்கினர். மன்னர்கள் மலைகளில் பெய்யும் மழை நீரை ஏரி, குளம், குட்டை என்னும் நிலைகளில் பாய்ச்சி நாட்டை வளப்படுத்தினர் என்பதை இப்பாடல் வழி அறிய முடிகிறது. நீரின் தேவையை திருவள்ளுவரும்,

"நீரின்றி அமையாது உலகு" (குறள் - 20)

என்கிறார். வேளாண்மைக்கு ஏற்ற நீர் வளத்தை தமிழர்கள் திட்டமிட்டு அமைத்திருந்தனர். நீர் மேலாண்மையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் குடபுலவியனர்,

"நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவண் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே"
**(புறநானூறு 27 - 30)**

என்கிறார். நீர் இல்லாமல் உடலால் இயங்க முடியாது. நீர் இல்லாமல் ஓர் அணுவும் அசைய முடியாது. நிலத்தையும், நீரையும் ஒன்று சேர்த்தவர் இவ்வுலகில் உடலையும், உயிரையும் கட்டிப் படைத்தவர் என குடபுலவியனார் பாண்டியன் நெடுஞ்செழியனை பாராட்டியதை இப்பாடல்வழி அறியலாம். மதுரைக் காஞ்சியில்,

"கல்காயும் கடுவேனிலொடு
இருவானம் பெயல் ஒளிப்பினும்
வரும் வைகல்மீன் பிறழினும்
வெள்ளம் மாறாது விளையுள் பெருக"
**(மதுரைக்காஞ்சி 105 - 110)**

என்று மாங்குடி மருதனார் பாண்டிய நாட்டில் நீர்வளமானது மலைகள் சுடேற்றிக் காய்ந்து போனாலும், மேகம் மழை பெய்யாது போனாலும், விடியற்காலையில் தோன்றும் வெள்ளி நட்சத்திரம் வடக்கே தோன்றுவதற்குப் பதிலாக தெற்கே தோன்றினாலும் ஆறுகள் வற்றாது நீர் பெருக்கோடு விளைச்சல் பெருகியிருக்கும் என்று விளக்கியுள்ளார்.

## நில மேலாண்மை

நில மேலாண்மை என்பது வரி, சுங்கம், திறை, நில அளவை, நிலப் பங்கீடு உள்ளிட்டவற்றுடன் தொடர்புடையதாகும். வரி வசூல் செய்தால்தான் நாட்டிற்கான திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்த முடியும்.

குடிமக்களின் வருவாயில் ஆறில் ஒரு பங்கை மன்னனால் வரி வசூலிக்கப்பட்டது. புதிய திட்டங்களின் மூலம் குடிமக்களின் வாழ்க்கையை வளப்படுத்த வேண்டும். அந்நிலையில் குடிமக்கள் தாமே மன்னனைத் தேடி வந்து தமது வரியை எளிதாகக் கொடுக்கும் நிலைமை அமைதல் வேண்டும். அந்நிலையிலும்அவர்கள்அவ்வரிப்பணத்தை எளிதாகக் கொடுக்கும் நிலைமை அமைந்து இருத்தல் சிறப்பாகும். மக்கள் வரியை பகுதியாகக் கொடுக்கவும் வழி இருத்தல் வேண்டும். மேலும் இவ்வாறின்றித் தமது நிர்வாக அலுவலரை ஏவி வலிய முறையில் வரியைக் கவர்தல், மன்னனுக்கும், குடிமக்களுக்கும் கேடு விளைவிக்கும் என்று பாண்டியன் அறிவுடை நம்பியைப் பிசிராந்தையார் சுட்டுமிடத்து,

"காய்நெல் அறுத்துக் கவளங்க கொளினே
மாநிறைவு இல்லதும் பன்நாட்கு ஆகும்"
நூறுசேறு ஆயினும் தமித்துப்புக்கு உணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடியாத்து நாடு பெரிதும் நந்தும்."
*(புறநானூறு 184: 1 - 6)*

எனும் பாடல்வழி தெளிவுபடுத்தியுள்ளார். அஃதாவது ஒரு மாவுக்கு குறைந்த நிலமாயினும் அதன்கண் விளைந்த

நெல்லை அறுத்துக் கவளம்கவளமாக யானைக்கு ஊட்டினால் நெடு நாட்களுக்கு உணவாகும். யானையும் பல நாள்சியடங்கி இன்புறும். அவ்வாறில்லாது "நூறு செய்யாயினும் தன் போக்கிலே யானை சென்று உண்ணுவதற்குப் புகுந்தால் அஃது உண்ட நெல்லினும் காலடிப்பட்டு அழிவெய்தியதே மிகுதியாகிவிடும்". இக்கருத்து வரி வசூலிப்போர் அளவாக மக்களின் வருவாய் அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும் என்பதேயாகும்.

## நிதி மேலாண்மை

நிதி தன்மையுடைய நடவடிக்கைகள் அல்லது நிகழ்வுகளைப் பதிந்து வகைப்படுத்தி மற்றும் நெறியான வகையில் தொகுத்து அதன் முடிவுகளை விளக்கும் கலையே நிதி மேலாண்மையாகும். நிதி மேலாண்மை என்பது பொருளாதாரத் தகவல்களைக் கண்டறிந்து அளவிட்டு தெரிவிக்கக்கூடியது. நிதி சார்ந்த முடிவுகளை ஆராய்தல், பொருளை அறிதல், தெரியப்படுத்துதல் ஆகிய செயல்களை நிதி மேலாண்மைக்கு உரியது என்று கருதமுடிகிறது.

உள்நாட்டு வணிகத்தாலும், வெளிநாட்டு வணிகத்தாலும் அக்காலத்தில் சுங்கம் கிடைக்கப் பெற்றது. உள்நாட்டு வணிகர்கள் கூட்டம்கூட்டமாக சென்று வணிகம் செய்தனர். அவ்வணிகர் கூட்டமானது "வாணிகச் சாத்து" என்று அழைக்கப்பட்டது. அச்சாத்துக்கள் சென்ற வழிகளில் சுங்கச் சாவடிகள் இருந்தன. அவரவர் எடுத்துச் சென்ற வணிகப் பொருளுக்கு ஏற்றப்படி சுங்கம் பெறப்பட்டது. "சுங்கம்", "உல்கு" எனும் சொற்கள் வரி வசூலை மையப்படுத்தியதாகும். குறிப்பாக உள்நாட்டு வணிகரிடமே சுங்கம் வாங்குதல் வழக்கம் என்பதை உருத்திரங்கண்ணனார்,

**"அணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்**
**உல்குடைப் பெருவழிப் கவலை காக்கும்"**

***(பெரும்பாணாற்றுப்படை 80 - 81)***

என்பார். கடல் வணிகத்திற்குரிய ஏற்றுமதி, இறக்குமதி பொருள்களால் "உல்கு" வரி மிகுதியாகக் கிடைத்து வந்தது. கதிரவனின் குதிரைகளுக்கு நாள் முழுவதும் ஓய்வு இருக்காது. கரிகாற் சோழன் சுங்கச் சாவடியில் வேலை செய்தவர்க்கு நாள் முழுதும் ஓய்வில்லாமல் உழைத்தனர் என்பதிலிருந்து வணிகத்தின் உயர்நிலையை அறியமுடிகிறது. அச்சுங்க காவலர் ஏற்றுமதி, இறக்குமதி பண்டங்களை அளவிட்டு சுங்கத்தைப் பெற்று வந்தனர் என்ற செய்தியைப் பட்டினப்பாலையில்,

**"நல்லிறைவன் பொருள் காக்கும்**
**தொல்லிசைத் தொழில் மாக்கள்**
**காயச்சினத்த கதிர்ச்செல்வன்**
**தேர்புண்ட மாஅ போல**
**வைகல் தொறும் அசைவின்றி**
**உல்கு செய்"**

***(பட்டினப்பாலை 120 - 125)***

என்று எடுத்தியம்புகிறார். மன்னனுக்கு வேண்டிய அளவு முதன்மையான வருவாயாக சுங்கம் கிடைத்ததை இப்பாடலடிகள் வழி அறியமுடிகிறது. இவ்வாறாய் நிதி மேலாண்மையை மன்னர்கள் மேற்கொண்டிருந்தனர்.

## திறை

மன்னனுக்கு அடங்கிய சிற்றரசர் ஆண்டுதோறும் திறை செலுத்தினர். திறை உயர் மதிப்பீட்டுப் பொருளாகவே இருத்தல் வேண்டும் என்ற தேவை இல்லை. அவரவர்க்கு எளிதில் கிடைத்த பொருளையே திறையாகச் செலுத்தி யுள்ளனர். சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணச் சென்றபொழுது குன்றக்குறவர், தமக்குக் கிடைத்த மலைப் பொருள்களுடன் சென்று மன்னரைக் கண்டனர். அக்குன்றக்குறவர்,

**“திறை சுமந்து நிற்கும் தெவ்வர் போல**
**யானை வெண் கோடும் அகிலின் குப்பையும்**
**மான்மயிர்க் கவரியும், மதுவின் குடங்களும்,**
**சந்தனக் குறையும் சிந்துரக் கட்டியும்.”**
***(சிலம்பு. காட்சிக்காதை 35: 6 - 9)***

என்று சிலம்பு காட்சிக் காதையிலும், பரிபாடலிலும் ஒத்த கருத்துடைய செய்திகள் கூறப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

கரிகாற்சோழன் இமயம் சென்றபொழுது அவனுக்கு அடங்கிய மன்னர்கள் திறை செலுத்தினர். குறிப்பாக வச்சிரநாட்டு மன்னன் முத்துப் பந்தரைக் கொடுத்து ள்ளான். மகத நாட்டு மன்னன் பட்டி மண்டபத்தை அளித்துள்ளான் என்பதை இளங்கோவடிகள் கூறுமிடத்து,

**“மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்**
**கோன் இறை கொடுத்த கொற்றப்பந்தரும்**
**மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன்**
**பகை புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்”**
***(சிலம்பு. இந்திர விழாவெடுத்த காதை 99 - 102)***

என்று சுட்டுவார். கூடுதல் நிதி மேலாண்மையை சங்க கால மன்னர்கள் கையாண்டுள்ளனர்.

## தொகுப்புரை

தேவையான உத்திகளை தேவையான நேரங்களில் கையாண்டு முன்னேற்றம் அடைந்தது சங்க காலச் சமூகமாகும். நீர் மேலாண்மையை சங்க மன்னர்களும், மக்களும் மேற்கொண்டிருந்ததை அறிய முடிகிறது. ஆறு, வாய்க்கால், குளம் உள்ளிட்ட நீர் ஆதாரங்களைப் பெருக்கியுள்ளனர். நில மேலாண்மையில் நில அளவை அதற்கான வரி, தேவையான நீர் உள்ளிட்ட கூறுகள் நீர் மேலாண்மையின் உத்திகளை எடுத்தியம்புகின்றன. நிதி மேலாண்மையானது “வாணிகச் சாத்து” எனும் பெயரில் வருவாய் பெறப்பட்டது. “உல்கு” மூலமும் பெறப்பட்டது. சிற்றரசர்களின் “திறைசுசுயும் நிதி ஆதாரமாகப் பெறப்பட்டது என்பதை அறிய முடிகிறது.